# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-வேலூர் மாவட்டம்

(28.06.2017 முதல் 02.07.2017 வரை)

**கடந்த நான்கு நாட்களில் நிலவிய வானிலை (23.06.2017 முதல் 26.06.2017)**

வேலூர் மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.11.6 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 35.0-39.0°C மற்றும் 24.0-28.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 40 முதல் 72 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 6-11 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 28.06.2017 | 29.06.2017 | 30.06.2017 | 01.07.2017 | 02.07.2017 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஒரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 6 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 16 | 16 | 18 | 18 | 18 |
| காற்று வரும் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 34 | 34 | 35 | 35 | 35 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 25 | 25 | 24 | 24 | 24 |
| ஈரப்பதம் | 55-70 | 55-70 | 50-65 | 50-65 | 50-65 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 02.07.2017 அன்று இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கோடையில் தீவனத்துடன் தினசரி 3.0 கிராம் அளவில் ஆஸ்பெர்ஜீல்லாஸ் ஓரையே (Aspergillusorizae) என்ற ஈஸ்ட்டை சேர்த்து அளித்தால் அது வெப்ப அயற்சியைக் குறைக்கும்.
3. கால்நடைகளுக்கு அளிக்கக்கூடிய வைக்கோல், கேழ்வரகுத் தட்டு, சோளத்தட்டு, கம்பந்தட்டு உலர்ந்த நிலக்கடலை கொடி போன்றவையே 1-2 அங்குல அளவில், சிறுசிறு துண்டுகளாக நறுக்கித் அத்துடன் 2 % சாதாரண சமையல் உப்பு கரைசலை கலந்து அளிப்பதன் மூலம் தீவனம் விணவதை தடுக்கலாம்.
4. கோழிப்பண்ணைகளில் தீவன தொட்டியை காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை உயர்த்தி வைப்பதால் வெப்பதாக்கத்தை குறைக்கலாம்.
5. கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கிற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.
6. ஆட்டு கொட்டகையின் தரையை 3 அல்லது 4 அங்குல அளவு மண்ணை மற்றுவதன் மூலம் நோய் தாக்குதலிருந்து பாதுகாக்கலாம்.
7. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
8. புழக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. காய்கறிப் பயிர்களில் வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த Carbendazim லிட்டருக்கு ஒரு கிராம் Carbendazim + lprodione அல்லது லிட்டருக்கு ஒரு கிராம் அல்லது Trifloxystrobin +Tebuconazole லிட்டருக்கு 0.75 கிராம் கலந்து நோய் தாக்கப்பட்ட செடியில் வேர் மற்றும் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் வேர்கள் நனையும்படி காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்கவும்
2. நெற் தரிசு உளுந்து மற்றும் பச்சை பயிரில் மேல் சாம்பல் நோயினைக் கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் அல்லது ஏக்கருக்கு 400 கி மேன்கோசப் அல்லது 1 கிலோ நனையும் கந்தகத் தூளை காலை அல்லது மாலை வேலையில் தெளிக்கவும்.